**தலைப்பு 251 – விலை மதிப்பீட்டுத் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 யூன் 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 திசெம்பர் 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு அந்நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய நிதிக்கூற்றுக்களை தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்

கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவுத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7(v) ஆம் பந்தியின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் தேறிய சொத்துக்களை கணக்கிடுவதற்காக முற்பணக் கணக்கு பெறுமதியில் வைப்புக் | குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தேறிய சொத்துக்கள் கணக்கிடும் தேவைப்பாடு | முற்பணக் கணக்கு பெறுமதியில் வைப்புக்கள் பெறுமதி கழிக்கப்பட்ட பின்னர் 2019 ஆம் ஆண்டில் தேர்தல் கொடுப்பனவுகள் செய்யப்பட்ட போதும் தேர்தல் அலுவலகத்தினால் எமக்கு கொடுப்பனவு |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கின் பெறுமதியில் கழிக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு முற்பணமாக வைப்பு மீதி கழிக்கப்பட்டதன் பின்னர் கிடைக்கும் பெறுமதி ரூபா 80,887,471 ஆக இருந்த போதும் அது ரூபா 79,125,679 என நிதி நிலைமை நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | செய்யப்படாமையால் தேறிய சொத்துக்களின் பெறுமதி அப்பொறுப்புக்களின் அளவிலிருந்து கழிக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | தீர்வு செய்யப்படாத கட்டுநிதி மீதியான ரூபா 1,761,792 ஆன நிதிச் சொத்தொன்றாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதி நிலைமை நிலைமைக் கூற்றில் அவ்வாறு காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | தீர்வு செய்யப்படாத கட்டுநிதி மீதி நிதிச் சொத்தொன்றாக காண்பிப்பதன் தேவைப்பாடு | தீர்வு செய்யப்படாத கட்டுநிதி மீதி நிதிச் சொத்தொன்றாக இருந்த போதும் இந்நிறுவனத்தில் தீர்வு செய்யப்படாத கட்டுநிதியாக தேர்தல் அலுவலகத்தினால் இந்நிறுவனத்திற்கு தீர்வு செய்ய வேண்டிய முற்பணமொன்றாக இருப்பதால் அத்தொகையை இந்நிறுவனத்தின் பக்கமாக பொறுப்பொன்றாக இருப்பதுடன் சொத்தொன்றல்ல அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஆண்டில் திணைக்களத்திற்கு ரூபா 554,855,000 ஆன கட்டுநிதி திறைசேரியிடமிருந்து கிடைத்திருந்த போதும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை | கட்டுநிதி கிடைப்பனவு உரிய வகையில் காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிப்பதன் தேவைப்பாடு | முன்னைய ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வகையில் 2019 ஆம் ஆண்டிற்காக காசுப் பாய்ச்சல் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதுடன் கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டதன் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | | | எதிர்வரும் ஆண்டுகளில் கட்டுநிதி பெறுனவு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | ஆண்டில் வருமானம் அல்லாத பெறுவனவுகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் முறையே ரூபா 121,435,816 மற்றும் ரூபா 22,514,574 ஆக இருந்த போதிலும், அப்பெறுமதி இனங்காணப்படும் வகையில் காசுப் பாய்ச்சல் கூற்றில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | காசுப் பாய்ச்சல் கூற்று நிதி பெறுவனவுகள் கொடுப்பனவுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் குறுக்குப் பதிவுகளின் மூலம் பெறுவனவுகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள தாகவும் எதிர்வரும் ஆண்டுகளில் காசுப் பாய்ச்சல் வேறு நிறுவனங்களுக்காக சேகரிக்கும் வருமானமாக பெறுமதியை காட்டுவதற்கு முடியுமான வகையில் பெறுவனவுகள் வெவ்வேறாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | தனிப்பட்ட சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினம் மற்றும் உதவிப் பணம் மாற்றங்களின் கூட்டுத்தொகை ரூபா 413,676,396 ஆக இருந்த போதும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 433,127,988 என காட்டப்பட்டிருந்தமையால் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 19,451,592 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | காசு வெளிப்பாய்ச்சல் முறையாக பதிவு செய்யும் தேவைப்பாடு | காசுப் பாய்ச்சல் கூற்றில் குறுக்குப் பதிவுகளின் மூலம் கிடைத்த பெறுவனவுகள் இல்லாமையால் கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட வேறுபாடு இடம்பெற்றுள்ளதாகவும் தனிப்பட்ட சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினத்தின் கீழ் காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதியில் ஊழியர் கடன் முற்பணம் கொடுப்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளதால் காசுப் பாய்ச்சல் கூற்றில் முற்பண கொடுப்பனவின் கீழ் அக்கொடுப்பனவு உள்ளடக்கப்படாமையால் காசேட்டில் காசு மூலம் |

| | | | |
|---|---|---|---|
| | | | செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் அடிப்படையில் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் கூடுதலான காசு வெளிப் பாய்ச்சல் காண்பிக்கப் படாத போதும் ஒவ்வொரு தலைப்பின் கீழும் காண்பிக்கப்பட வேண்டிய பெறுமதிகள் வேறுபட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | வைப்புக்கள் பெறுவனவு ரூபா 54,325,515 மற்றும் வைப்புக் கொடுப்பனவுகள் ரூபா 93,467,643 தொகை திணைக்களத்தின் கணக்கினுள் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அப்பெறுமதிகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | வைப்புக்கள் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கம் செய்வதன் தேவைப்பாடு | காசுப்பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு தலைப்பின் கீழும் தெளிவாக பெறுவனவு கொடுப்பனவு இனங்காணப்பட்டு வகைப்படுத்தப்பட்டு காசுப்பாய்ச்சல் கூற்று எதிர்வரும் ஆண்டுகளில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | முற்பண பெறுவனவு ரூபா 21,767,894 மற்றும் முற்பணக் கொடுப்பனவு ரூபா 26,563,420 காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | முற்பண பெறுவனவு மற்றும் கொடுப்பனவு இனங்காணப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்றில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் தேவைப்பாடு | தெளிவாக இனங்காணப்பட்டு எதிர்வரும் ஆண்டில் காசுப் பாய்ச்சல் கூற்று எதிர்வரும் ஆண்டுகளில் தயாரிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 1.6.3 முற்பணக் கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் பதிவேடுகள் மற்றும் கணனி அச்சீட்டுக் குறிப்பின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 93,119,762 ஆக இருந்த போதும் தனியால் மீதி வகைப்படுத்தல் | மீதிகளுக்கு இடையே காணப்படும் வேறுபாடு தாமதமின்றி இணக்கம் செய்து சீர் | 2015 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தரொருவரின் ரூபா 71,029 ஆன கடன்மீதி 2018 ஆம் ஆண்டின் போது திணைக்கள முற்பண பீ கணக்கிற்கு வரவு |

| | | |
|---|---|---|
| பொழிப்பின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 93,050,364 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 69,398 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் இவ்வேறுபாட்டில் ரூபா 1,626 ஆன மீதியொன்று இனங்காணப் படாத மிகையொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது. இவ்வேறுபாடு முன்னைய ஆண்டிலிருந்து காணப்பட்டு வருவதுடன் அவற்றை இனங் கண்டு தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செய்வதன் தேவைப்பாடு | வைக்கப்பட்டிருந்தது. எனினும் இடமாற்றம் பெற்றுவந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் கீழ் திணைக்கள கணக்கேடுகளில் பதிவு செய்யப்படாதிருந்தமையால் இவ்வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகவும் அத்தவறினை திருத்தம் செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அறிவித்து அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 512,531,243 தொகையான நிலுவை வருமானத்தில் ரூபா 293,770,892 ஆன அதாவது 57 சதவீதம் 01 ஆண்டு முதல் 11 ஆண்டு வரையான காலப்பகுதியில் நிலுவையாக காணப்படுவது அவதானிக்கப்பட்டது. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கும் தேவைப்பாடு | மீளாய்வாண்டின் உள்ளவாறான வருமானம் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் திணைக்களத்தின் கணக்கு எண்ணிக்கையின் பிரகாரம் சரியானது எனவும் நிலுவை வருமானமான ரூபா 218,760,351 தொகையில் ரூபா 167.5 மில்லியன் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்காக கிடைக்க வேண்டிய வருமானம். எனவும் அதன் பிரகாரம் ஏனைய நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 51.2 மில்லியன் என அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டில் இறுதியில் காணப்பட்ட ரூபா 317,424,002 ஆன நிலுவை வருமானத்தில் ரூபா 23,653,110 அதாவது 07 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டின் இறுதியில் (2018.12.31 இல் உள்ளவாறு) அதாவது ரூபா 293,770,892.13 தொகையில் ரூபா 23,653,110 அதாவது 8% மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. ஏனைய எண்ணிக்கைகள் சரியானதென அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் 03 அரச நிறுவனங்களிடமிருந்து ரூபா 223,158,901 ஆன கூடியளவு வருமானம் நீண்டகாலமாக நிலுவையாக இருப்பது அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | நிலுவை வருமான பதிவேட்டில் காணப்படும் நிறுவனங்கள், கடிதங்கள் மூலம் தெரியப்படுத்துதல், இந்நிறுவனங்களுடன் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளல், அந்நிறுவனங்களால் அந்நிலுவை வருமானத்தை உறுதிப்படுத்துவதற்காக மீண்டும் வினவும் விடயங்களை துரிதப்படுத்தி அனுப்புதல் போன்ற நடைமுறைகள் பின்பற்றி இப்பணத்தை அறவிடமுடியுமென அறிவிக்கப் பட்டிருந்தது. |
| (ஈ) | பாரிய கொழும்பு மாகாண விலை மதிப்பீட்டு அலுவலத்திற்குரிய மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக காணப்படும் வருமானம் ரூபா 295,490,576 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இந் நிலுவை வருமானம் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்படும் மொத்த நிலுவை வருமானத்தில் 58 சதவீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | பாரிய கொழும்பு மாகாண விலை மதிப்பீட்டு அலுவலகத்தின் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக காணப்படும் வருமானமான ரூபா 295,490,576 தொகை திணைக்கள கணக்கின் பிரகாரம் சரியானதென அறிவிக்கப்பட்டிருந்தது |

**2.2 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2 மூலதன செலவின விடயங்களில் முழு நிதி ஏற்பாடுகளின் மொத்தம் 3,400,000 ஆக இருந்ததுடன் நிதி ஏற்பாடுகளின் சேமிப்பு ரூபா 2,792,858 ஆக இருந்தது. ஒவ்வொரு வேலை விடயங்களின் நிதிஏற்பாடு சேமிப்பு 80 சதவீதம் முதல் 84 சதவீதம் வரையான வீச்சில் பரவிக் காணப்பட்டது. | மேற்கொண்ட வருடாந்த பாதீட்டு நிதி ஏற்பாடுகளை செயற்திறனாக பயன்படுத்தும் தேவைப்பாடு | கருத்துரை தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 1.1.7 பந்தியின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச்சென்று 03 மாதங்கள் கடந்த பின்னர் திணைக்களங்களிடையே தீர்க்கப்படாத கடன் மீதி காண்பிக்காமல் இருக்கும் வகையில் செயலாற்ற வேண்டிய போதிலும், 20 முதல் 33 வருடங்கள் வரையான காலம் கடந்த ரூபா 11,916 தொகையான 03 கடன் மீதிகள் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தன. | தீர்வு செய்யப்படாத கடன் மீதிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவைப்பாடு | நிதி அமைச்சின் அறிவித்தலின் பிரகாரம் 2020.06.22 ஆந் திகதி தேர்தல் ஆணைக்குழுவிடமிருந்து இந்த உத்தியோகத்தர்களின் தகவல்கள் கோரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | இரு உத்தியோகத்தர் களிடமிருந்து ஓய்வுபெற்றுச் மூன்று மாதங்கள் முதல் மூன்று வருடங்கள் வரையான கால வீச்சில் அறவிட வேண்டிய ரூபா | - மேற்படி - | ஒரு உத்தியோக்தரின் கடன் மீதியை ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்காக ஓய்வூதிய திணைக்களத்தினால் தேவையான நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | 510,202 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | | எடுக்கப்பட்டுள்ளதாகவும் மற்றைய உத்தியோகத்தரின் கடன் மீதியை ஓய்வூதிய பணிக்கொடை தயாரிக்கப்பட்டதன் பின்னர் அறவிட முடியுமென அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | வேலை இடைநிறுத்தப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 05 வருடங்கள் முதல் 08 வருடங்கள் வரையான காலப்பகுதிக்குரிய 03 நிலுவை கடன் மீதிகளின் கூட்டுத் தொகையான ரூபா 308,614 அறவிடப்படாமல் காணப்பட்டன. | - மேற்படி - | நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2.4 வங்கி கணக்கிணக்கம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இனங்காணப்பட்ட பெறுவனவுகள் ரூபா 687,887 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 662,316 தொகை ஒரு மாதத்திற்கு மேலாக இணங்காணப்படாத பெறுவனவாக இருந்தது ரூபா 662,316 பெறுமதியில் ரூபா 238,583 தொகை ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் வருமானங்களை இணங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்படாத பெறுவனவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்யும் நடை முறை யொன்றை அறிமுகப்படுத்தும் தேவைப்பாடு | இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

3. செயற்பாட்டு மீளாய்வு
--------------------------------------

3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்
------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மத்திய மாகாண அலுவலகத்தின் காணி மற்றும் கட்டிடங்கள் | | |
| விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மத்திய மாகாண அலுவலகம் மற்றும் சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணி 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதும் 2019 யூலை வரை இக்காணியின் உரித்தினை திணைக்களத்திற்கு கையேற்கும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களின் உரித்தினை முறையாக தாமதமின்றி கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கும் தேவைப்பாடு | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் சுற்றுலா விடுதி மற்றும் மாகாண அலுவலகம் அமைந்துள்ள காணி இலவசமாக வழங்கப்பட்ட ஆதனம் ஒன்றல்ல எனவும் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உரித்தினை உறுதிப்படுத்துவதற்காக அதிகளவு முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலக கட்டிடம் நிர்மாணிக்கப்படும் சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட சட்ட ரீதியான சிக்கலொன்று காரணமாக பொருத்தப்பட்டிருந்த காற்றுச் சீராக்கிகள், கட்டிட திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட 2009 ஒக்தோபர் 27 ஆந் திகதி முதல் இதுவரை செயற்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்படுவது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது | விளைவற்ற சொத்துக்களை தாமதமின்றி பயன்பாட்டிற்கு எடுத்தல் வேண்டும். | இக்கட்டிடங்கள் அப்போதய நிர்மாண ஒப்பந்தக்காரர்களுடன் ஏற்பட்டுள்ள சட்டரீதியான சிக்கல் காரணமாக காற்றுச்சீராக்கி இயந்திரங்கள் பொறுப்பேற்கப்பட வில்லையென அறிவிக்கப் பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கண்டி நகருக்கு மிகவும் அண்மையில் உள்ள அரச கட்டிடத்தில் காணப்படும் கேட்பேர்கூடத்தை பயன்படுத்துவதற்காக மிகவும் ஆக்கபூர்வமான வேலைத்திட்டமொன்று திணைக்களத்தினால் பின்பற்றப்படாதிருந்தமை மற்றும் இதனைப் பயன்பாட்டிற்கு எடுப்பது இருந்து நின்று இடம் பெறுவதாக அவதானிக்கப்பட்டது. இக்கட்டிடத்தை நிர்மாணிக்கும் போது இவ்வளவினை ஏனைய திணைக்களங்களின் பயிற்சி செயற்பாடுகளுக்காக பயன்படுத்தும் நோக்கத்துடன் மேற்கெள்ளப்பட்டிருந்த போதும் அதற்காக பொருத்தமான வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | கேட்போர் கூடத்தை பயன்படுத்துவதற்காக மேலும் பாரிய செயற்பாடொன்று மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாக உள்ளதாகவும் அதற்காக வேலைத்திட்டமொன்று தற்போது தயார்செய்யப்பட்டு புதிதாக காற்றுச்சீராக்கி முறைமையொன்று பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் எதிர்காலத்தில் மிகவும் செயற்திறனாக இக்கேட்போர் கூடத்தை பயன்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | இக்கேட்போர் கூடத்தை ஏனைய அரசின் செயற்பாடுகளுக்காக வாடகைக்கு வழங்குவதற்கோ பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | இக்கேட்போர் கூடத்தை ஏனைய செயற்பாடுகளுக்காக வாடகைக்கு அடிப்படையில் பயன்படுத்துவதற்கோ வாடகை மதிப்பீடு செய்து பொருத்தமான நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 3.2 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடுகள் நிறைவேற்றப்படாத 1278 கோவைகள் எஞ்சியிருந்தன. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றும் தேவைப்பாடு | திணைக்களத்தில் காணப்படும் உத்தியோகத்தர் பற்றாக்குறை மற்றும் அதிவிசேட மற்றும் முன்னுரிமை அளிக்க வேண்டிய அபிவிருத்தி செயற் திட்டங்களுக்கு கவனம் செலுத்துதல் மற்றும் பாதுகாப்பு காரணங்களின் பேரில் கட்டிடத்திற்கு பிரவேசிப்பதற்கு |

இடமளிக்காமை மற்றும் குறித்த ஆதனங்களில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக வருடாந்தம் காணப்படும் கேள்வியை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது.

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 255 பதவிகள் அல்லது 31 சதவீதம் வெற்றிடங்களாக காணப்பட்டது. | இந்த வகையில் பதவியணி வெற்றிடங்கள் திணைக்களத்தின் செயலாற்றலுக்கு பாதகமான வகையில் தாக்கமளிப்பதால் துரிதமாக அத்தியவசிய வெற்றிடங்கைளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய தேவைப்பாடு. | இணங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | சிரேஷ்ட மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 185 அல்லது 81 சதவீதமும் மூன்றாம் மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 49 அதாவது 13 சதவீதமும் இரண்டாம் மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 14 அல்லது 11 வெற்றிடங்கள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டன. | - மேற்படி - | சிரேஷ்ட மட்டத்தில் 03 மேலதிக பிரதான மதிப்பீட்டாளர்களுக்காக தகைமையுள்ள உத்தியோகத்தர்கள் இல்லாமல் இருப்பதாகவும் 15 பிரதான மதிப்பீட்டாளர்களில் 10 வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நேர்முகப் பரீட்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 60 சிரேஷ்ட மதிப்பீட்டாளர்களுக்காக தகைமைகள் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் இல்லையெனவும் கணக்காளர் பதவிக்காக கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. மூன்றாம் மட்டத்தில் 46 உதவி மதிப்பீட்டளர்களுக்கும் |

| | | | |
|---|---|---|---|
| | | | அமைச்சரவை அங்கீகரிக்கப்பட்டுள்ள 200 இல் 100 உட்பட 153 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள தாகவும் மொழி பெயர்ப்பாளர் பதவியொன்றும் 02 தகவல் மற்றும் தொழில்நுட்ப பதவிகளுக்காக ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன், இரண்டாம் மட்டத்தின் வெற்றிடங்களைப் நிரப்புவதற்கு ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது அங்கீகரிக்கப்பட்ட 139 பதவிகளில் 132 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது. |
| (இ) | 2019 செப்தெம்பர் மாதம் 27 ஆந் திகதிய 2142/75 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இலங்கை மதிப்பீட்டாளர் சேவையின் சேவைப்பிரமாணம் பிரசித்தப்படுத்தப்பட்டு அத்திகதி முதல் செயற்படுத்தி ஓராண்டிற்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதும் அதன் பிரகாரம் தேவையான மதிப்பீட்டு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | - மேற்படி - | இலங்கை மதிப்பீட்டாளர் சேவையின் சேவைப் பிரமாணத்தின் பிரகாரம் சேவையில் ஈடுபடுத்தி யுள்ள உத்தியோகத்தர்கள் புதிய சேவை பிரமாணங்களுக்கு உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கைகள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் II/II உதவி மதிப்பீட்டாளர் 153 பதவிகள் மற்றும் I/II 105 மதிப்பீட்டாளர் பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டிருந்தது. |